275

275

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

நூறுமணிமாலை.

அஹ்காமுஷ்ஷரயி இய்யா

இஃது

கீழக்கரை கிழக்குத்தெரு

பு. முஹம்மது அப்துல்காதர் குமாரராகிய,

பு. மு. நூறுமுஹம்மது லெப்பை,

அவர்களால் இயற்றி,

வாளிநோர்க்கம்,

சம்மாட்டியார்கள் உதவியாலும்,

கா. சே. ஷம்ஸுதீன் ராவுத்தர்

முயற்சியாலும்

பரமக்குடி விநாயகன் பிரஸில்.

பதிப்பிக்கப்பெற்றது.

1934.

[அணா 4

QT:417
N34
149254

முகவுரை.

எனது அன்புற்ற சகோதரர்களே!

அஸ்ஸலாமு அலேக்கும்.

அல்லாஹுத் ஆலாவையும் புகழ்ந்து அவனது திருத்தூதர் நபிக்கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேரில் புகழ்ந்து ஆல் அஸ்ஹாபிமார்கள் அனைவர்களையும் புகழ்ந்து இதை ஆரம்பித்திருக்கிறேன்.

இக்காலை நம் தமிழ்நாட்டு முஸ்லீம் சகோதரர்கள் நம் தீன் இஸ்லாத்தில் கூறப்பட்டிருக்கும் தொழுகைக்குறிய சாதனங்கள் இன்னதென்று தெரியாமல் பெரும்பாலர்களிருக்கிறார்கள். ஆனதால் பு மு. நூர்முகம்மது லெப்பை என்ற அடியனுக்கு அடியனாகிய நான் கல்வி கேள்விகளில் ஒரு சிறிதையேனும் அறியாதமுறையால் யான எதோ எனது சிற்றறிவுக்கெட்டிய வரை இதை ஒருவாறு பல ஆகங்களிலிருந்தும் பொறுக்கி சேர்த்து இச்சிறிய புஸ்தகத்தை அச்சிடலானேன். இதில் ஏதாவது சொற்பிழை எழுத்துப்பிழைகளிருந்தாலும் சாகரம் தன்னிடத்தில் வந்தடையக்கூடிய கழிவு தண்ணீரை எப்படி யேற்றுக்கொள்கிறதோ அதே மாதிரி அடியேனுடைய பிழையைப் பொறுத்து இச்சிறிய நூறுமணி மாலை என்ற நூலை வாங்கி வாசித்து ஆராச்சி பண்ணுங்கள் வாங்கி மூலையில் சும்மா போட்டிடாமல் கண்ணுற்று பார்த்தால் இதன் நம்மை விளங்கும். என்னை இன்னும் இவ்விதமான புஸ்தகங்களியற்ற உற்சாகப்படுத்துவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

அஸ்ஸலாம்.

இங்ஙனம் தங்களன்புள்ள,

பு. முகம்மது அப்துல்காதர் குமாரருகிய,

பு மு நூறுமுகம்மது லெப்பை,

கிழக்குத்தெரு, கீழக்கரை.

சாற்றுக்கவி.

காத்தாங்குளம் செய்யது முஹம்மது மௌலானா சொல்லிய
சாற்றுக்கவி.

வெண்பா.

சீராரும் புகழ்பெருகும் கீர்த்தியோங்கும்
செம்மலி றசூல்கலிமா தொழுகை நோம்பும்
சிறியோரும் பெரியோரும் அதின்விபரம்
இலகுவாய் அறிந்து கொள்ளும் பொருட்டாய்
செந்தமிழால் நூறுமணி மாலைதனை
பாடினோர் தங்கள்பிழை நீ பொறுப்பாய்
ஆதிறகுமானே நீ காப்பு.

சாற்றுக்கவி.

கீழக்கரை குத்துமுல் இஸ்லாம் சங்கத்தின் பிரஸிடெண்டும்,
சீறாபுத்தூஹுஷாம் முதலிய புராணப் பிரசங்கியுமாகிய,
மகாகனம் கா. செ பு ஷம்ஷுத்தீன் புலவரவர்கள் இயற்றியது.

வெண்பா.

மகிதலத்தின் மாந்தர் மார்க்கம் நன்றாயறிய
நூறுமணி மாலை சொன்னார் புகழ்பெருகும்
நூறுமுகம்மதென்னும் னுதியோர் தமக்கிணையாய்
கார்புவியி லெங்குமில்லை காண்.

சாற்றுக்கவி.

குலசேகரபட்டணம் அ. ம. முஹம்மது முஹீயித்தீன்
மரைக்காயர் ஆலிம் அவர்களாலியற்றப்பெற்றது.

வெண்பா.

நீதமணி யாமிறசூல் நீணிலத்தோதுமறை
நூறுமணி மாலைதனை விரிவுறவே போதிக்க
நூதனமா முரைசெய்தார் நூறுமுஹம்மது வென்பார்
தீதறுமே யோதுவர்க்குத்தான்.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர்றஹீம்

நாறுமணிமாலை.

கல்வி கற்றுக்கொள்ளும் சிறுவர்கள் சிறுமிகள் பிரதி தினமும் காலையில் அப்பற்றமான சுத்தமான கொம்புத்தேன் சாப்பிட்டு வந்தால் கல்வி சுறு சுறுப்பாகவரும். சிறுவர்கள் என்றால் ஆணும் பெண்ணும் ஆண்பாலர்களும் பெண்பாலர்களும் பெரியவர் சிறியவர் ஆகாரத்தை நன்றாய் மென்று திங்கவேணும் ஆகாரத்தை ஈ மொய்க்காமல் மூடிவைக்கவேணும். வியாதிக்காரர் களுக்கு வாந்தியையும், மலத்தையும் உமியுடன் கலந்து நெருப்பில் போடவேணும். கிரிமிப்பூச்சி காலறாப்பூச்சி என்றது தீரிவிடும்.

மாணபரியெந்தம் உண்மை பேசவேண்டும். அன்பு அதற்கு விபரம் ஈகை இரக்கம் தயவு தாக்ஷன்யம் தன் உயிர்போல் மன்னுயிரைப் பாதுகாத்துவரவேணும். விஸ்வாசம் அதற்கு விபரம் பொய்சொல்லக்கூடாது பயம் ஆண்டவன் தாய் தகப்பன் பெரியோர்களுக்கு பயந்து நடக்கவும். நாணம் யென்றால் வெக் கம் ஆண் பாலர்களும், பெண் பாலர்களும் ஒழுக்கம், மட்டும் மரியாதி தாழ்மையாக நடக்கவும். ஒற்றுமை யென்றால்; யெல் லோர்களும் ஒற்றுமையாக இருக்கிறது. பெருமை நன்மையை தின்றுவிடும். ஆண்டவனைத் தொழுதால் ஆபத்து இல்லை. பிச்சை எடுத்தாவது சீனதேசம்போய் கல்வியைக் கற்றுக்கொள்ளும். ஒன்றுபட்டால் ஒற்று வாழலாம் ஆராய்ந்து பார்க்காத காரியம் மாறாகமுடியும். சோம்பேரி தேம்பித்திரிவான். வாய்னாலே நம்மை யால் சிலவிடு கோபம் புத்தியை தின்றுவிடும். செய்வினை திருந்தச் செய் சேரிடம் அறிந்து சேர்.

யாருடைய அடியான் நாயனுடைய அடியான். யாரு டைய மார்க்கம் இபுராஹீம் நபியுடைய மார்க்கம். யாருடைய கோத்திரம் இஸ்மாய் நபியுடைய கோத்திரம். யாருடைய மக்கள் ஆதமுடைய மக்கள். யாருடைய உம்மத்து முஹம்மது நபியுடைய உம்மத்து. எந்த மதகபு சாவி மதகபு அல்லது ஹனபி மதகபு

அல்லது மாலீக்கி மதகபு அல்லது ஹம்பிலி மதகபு. எப்ப இஸ்லாம் ரோஸ் மீதாக்குடைய நாளேயில் இஸ்லாம் ரோஸ் மிதாக்குடைய நாள் என்பதிற்கு விபரம். பண்டு அருவாகுகளை அல்லாகுத்தாலா தன் ஹலரத்தில் நிறுத்தி அலஸ்த்து பிறப்பிக்கும் நான் உங்களுக்கு நாயன் நல்லமோ என்று கேட்டபோது அதுகளெல்லாம் நாயனே நீதான் எங்களுடைய நாயன் என்று சொன்னதே அந்த நாளேயில் தான் ஈமான் கொண்டோம். அந்த நாள்த்தான் ரோஸ் மிதாக்குடைய நாள்.

தலமுறையில் பருலாகிறது எங்கள் நெயினூர் முஹம்மது நபி மக்கத்தில் பிறந்து மதீனத்தில் உபாத்தாகி அடங்கப்பட்டார்கள் தாயார்பேர் ஆமினுவும்மா, தகப்பனூர் பேர் அப்துல்லா, பேரனூர் பேர் அல்துல் முத்தலிபு, பூட்டனூர் பேர் ஹாஜிம், முப்பாட்டனூர் பேர் அப்துல்முனவ்.

அவ்வல்க்கலிமா.

தையிபு லாயிலாக இல்லல்லாஹு வணக்கதிற்கு பாத்திரவான் யாருமில்லை. அல்லாகுத்தாலாவை தவிர முஹம்மது றசூலில்லாஹீ முஹம்மதுநபி (ஸல்) அல்லாகுத்தாலாவுடைய திருத்தூதராக இருக்கும்.

ரேண்டாம் கலிமா.

சஹாதத்து அசஹது பிசகற அரிந்து விண்ணப்பம் செய்கிறேன். அன்லா இலாக இல்லல்லாகு உண்மையாக வணக்கத்திற்கு பாத்திரவான் யாருமில்லை. அல்லாகுத்தலாவை தவிர வஹதகு அவன் தனித்தவன். லாசரிக்கலகு அவனுக்கு யாதொரு இணையுமில்லை. வஅசஹது இன்னம் பிசகற அறிந்து விண்ணப்பம் செய்கிறேன் அண்ண முகம்மதன் உண்மையாக முஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமாகிரவர்கள் அப்துகு- அவனுடைய உரிய அடியாருமாய் வரசூலுகு அவனுடைய திருத்தூதாங்கரும்மாய் இருக்கும்.

மூன்றும் கலிமா.

தம்ஜீது சுபுஹானல்லாஹீ அல்லாகுத்தாலாவை துய்தாக்குகிறதாக: துய்தாக்குகிறேன். வல்ஹம்துவில்லாஹீ எல்லாப்

புகழும் புகழ்ச்சியும் அல்லாகுக்காக இருக்கும். வலா இலாக இல்லல்லாஹு வணக்கத்துக்கு பாத்திரவான் யாருமில்லை. அல்லாஹுத்தாலாவைத்தவிர அல்லாஹு அக்குப்பர் அல்லாகுத்தாலா ரெம்பவும் பெரியவன். வலாஹவ்ல யாதொரு பாவத்தை விட்டும் திரும்புதலுமில்லை. வலாஹீவத்த யாதொரு இபாதத்தின்பேரில் பிலனும் இல்லை இல்லா பில்லாகில் அலியுல் அலிம் வலுப்பமாகிய உயர்த்தியாகி அல்லாகுத்தாலாவில் உதவி கொண்டொளிய.

நாலாம் கலிமா.

தவிஹீது லாகிலாக இல்லல்லாகு வணக்கத்துக்கு பாத்திரவான் யாருமில்லை அல்லாகுத்தாலாவைத்தவிர வஹதகு அவன் தனித்தவன் லாஷரிக்கலகு அவனுக்கு யாதொரு இணையுமில்லை. லெஹுல்முழுக்கு அவனுக்குடையதாய் இருக்கும். ராசாங்கம் வலஹுல்கம்து அவனுக்காகயிருக்கும் எல்லாப்புகழும் புகழ்ச்சியும் யுஹ்யி மவ்த்தானவர்களே. ஹயாத்தாக்குவான் வய்மீத்து ஹயாத்தானவர்களை மவுத்தாக்குவான் பியெதி ஹீஸ்ரீன ஹய்ரு அவன் வசமாய் இருக்கும் நலவடங்களும், வஹுவ அலா குல்லி செய்யின்கதிர் அவனுகிறவன் வஸ்த்துவ் அடங்களின் பேரிலும் மிகவும் தரானி பெற்றவன்.

ஐந்தாம் கலிமா.

றத்துல்குபிர் அல்லாஹும்மா யா அல்லாகு இன்னி அவூதுபிக்கமின் அன் உஸிரிபிக்க செய்அன் வஅனு அஹுலமு நான் அரிந்தவனுக அரிவேன் உன்னைக்கொண்டு இணைவைக்கிறதை விட்டும் உண்மையாக உன்னைக்கொண்டும் காவள்ப்பாடு தேடுகிறேன். வஅஷ்த்தபிர்க்க விமால அஹுலமு நான் அறியாமல் செய்த பாவத்துக்கு உன்னிடத்தில் பிழை பொருக்கத்தேடுகிறேன். இண்ணக்க அந்த அல்லாமல் ஒயுபு உம்மையாக நீயாகியவன் ஒய்புகளை மிகவும் அறிந்தவன். துப்த்து அன்ஹு உன்னைக்கொண்டு இணைவைக்குதலென்னும் சிர்ஹைவிட்டும் தவுபாசெய்து மீண்டேன். ஒத்தப்பர்ரா அத்து அன்குல்லிதீனில் சிவாதீனில் இஸ்லாமீதினுல் இஸ்லாமைத்தவிர மத்தும் மார்க்கம் அடங்களை விட்டும் நீங்கிவிட்டேன். வஅஸ்ஹந்து வஅகூலுலாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுறசூலுல்லாஹீ யெதுனி லாயிலாக

இல்லல்லாகு முஹம்மதுறசூலுல்லாஹீ என்று சொன்னவனுக. பெண்பாலர்கள் சொன்னவலாக இஸ்லாமாகிவிட்டேன் இதை அந்தியும் சந்தியும் ஓதுகிறது குபுரைவிட்டும் நீங்குகிறதற்கும் சமமாயிருக்கும்.

கலிமா பருலுக்கு பாட்டு.

நவிலும் கலிமாவில் நான்கு பரமுசளரம்
குவலேபத்திலே யதனே கூறிடுகிறேன் கேளும்
ஆதியொருவனென்றும் அவன் வர்ணிப்பும் செயலும்
சோதிநபி மொழிந்த சொல்லே யுண்மை கொள்வதுமாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

கலிமாஷஹாதத்துக்கும் நாலு பரலு உண்டு. 1வது இது பாத்து தாத்தில்லாஹித்தாலா எஹ்னி அல்லாகுத்தாலா உடைய தாத்தே உண்டென்கிறது. 2வது இதுபாத்து ஷிபாத் தில்லா ஹீத்தாலா எஹ்னி அல்லாகுத்தாலாவுடைய ஷிபாத்து களே உண்டென்கிறது. 3வது இதுபாத்து அபாலில்லாஹித்த ஆலா எஹ்னி அல்லாகுத்தாலாவுடைய செயல்களே உண்டென் கிறது. 4வது இதுபாத்து ஸிதிக்கிறசூலுல்லாஹீ (ஸல்) எஹ்னி அல்லாகுத்தஆலாவுடைய றசூலின் சொல்லே உண்மை கொல்வது.

ஷறுத்துடைய பரட்டு.

சாற்றுங் கலிமாவின் ஷறுத்துகளும் நாலாகும்
மாற்றமில்லா மனதை மனதிலிருத்திடவும்
வெல்லுங் கலிமாவை வாயால் விளங்கிறதும்
அல்லும் பகலும்மதை யகத்திலுண்மை கொள்கிறதும்
எல்லாவுருப்புகளும் இனங்கியமல் செய்கிறதும்
பொல்லாங் கணுகாமல் பர்ழை யிறுப்பதுமாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

கலிமா ஷஹாதத்துக்கு நான்கு ஷறுத்துகளுண்டும். 1வது மொழியதிராணியுள்ளவன் நாவினல் விண்ணப்பஞ்செய் வது. 2வது கல்பினல் உண்மை கொள்கிறது. 3வது தீனி லுள்ள நல்ல அமல்களேச் செய்கிறது. 4வது பாலுகலே அதா வாலும் கலாவாலும் இறுத்திவருவது.

ஈமானின் பாட்டு.

ஈமான் பரலாறு இருதயத்திலிறுத்திடவும்
கோமானுடன் மலக்கும் குத்பும் றசூல்நபியும்
மறுமைநாள் கற்பனையும் மஹஷர் நன்மை தின்மைகளும்
பொறுமையுள்ள நாயகனின் புறத்தில்நின்று முள்ளதுவாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஈமானுடைய பரலு ஆறாயிருக்கும்.

(1) அல்லாஹுத்தாலாவை கொண்டும்.
(2) மலக்குகளைக் கொண்டும்.
(3) வேதங்களைக்கொண்டும்.
(4) றசூல்மார்களைக்கொண்டும்.
(5) ஓடுக்கத்து நாளைக்கொண்டும்.
(6) நன்மை தின்மை கற்பனை அல்லாகுத்தாலாவின் னின்றும் உள்ளதென்கிற கட்டளையை கொண்டும் மவுத்துக்குப் பின் எழுப்புவதைக் கொண்டும் நான் உண்மையாக ஈமான் கொண்டேன்.

ஈம்மானுடைய சருத்துடைய பாட்டு.

எட்டு ஷருத்தீமானில இறையை யுவக்கிறதும்
இட்ட கட்டளை நடத்தும் இமையோரடங்களையும்
ஹபாய் நபிகளையும் குஷியா யுவக்கிறதும்
தப்பாய் நடப்பவர்மேல் தான்கோவமாகிறதும்
அல்லா விலக்கினதை யறிந்து விலக்கிறதும்
வல்லோனின் கட்டளைக்கி வழிப்பட்டு எப்போதும்
நல்லோன் கிருவையினுல் நாமாசைவைக்கிறதும்
பொல்லா அதாபுதனை பயந்து நடப்பதுமாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஈவானுடைய ஷறுத்து எட்டாயிருக்கும்.

(1) இஸ்லாம்.
(2) பிருஷம்
(3) குபிர்
(4) கோபம்

(5) இனங்களும் நல்ல காரியங்களுக்கு பொருந்திக் கொள்வது.

(6) விலகலும் கெட்டகாரியங்களை விலகிக்கொள்கிறது
(7) பயமும் ஆண்டவனுக்கு பயந்து நடக்கிறது.
(8) ஆதாவாம் ஆண்டவனுக்கு பயந்து நடந்தால் உதவி கிடைக்கும்.

இஸ்லாத்தின் பாட்டு.

இஸ்லாத்திலேந்து பர்ழியம்பும் கலிமாவும்
பிஸலாய்த் தொழுகை நோம்பும் பேனும் ஸக்காத்து ஹஜ்ஜுமாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

இஸ்லாத்துடை பரலு 5 ஆகயிருக்கும்

(1) கலிமாச்சொல்கிறது அசகது அல்லாயிலாக இல்லலாகு வஅசகதன் அன்னம் முகம்மது றசூலுல்லாஹி என்று கலிமா சொல்லுகிறது.

(2) ஐந்து நேரமும் விடாமல் தொழுகிறது.
(3) முதல் உல்லவர்கள் சக்காத்துக் கொடுக்கிறது.
(4) றமலான் மாதம் முழுதும் நோம்பு பிடிக்கிறது.
(5) திரானி பெற்றவர்கள் ஹச்சுசெய்வது.

இஸ்லாத்தின் சறுத்தினுடைய பாட்டு.

இஸ்லாத்தின் சர்த்து ஐயிந்து ஈமான் குபிர்நீக்கள்
இல்மை வளர்க்கிறதும் இல்லறம் துரவறமாம்

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்கிறது அர்த்தம்.

இஸ்லாத்தினுடைய சர்த்து 5 இருக்கும்

(1) ஈமான்
(2) குபிர் நீக்கள்
(3) ஆசையுடன் இல்மைப்படிக்கிறது
(4) இல்லறம் துணியா
(5) துறவறமாம் தீன் இஸ்லாமென்ற மார்க்கம்.

தீன்னேன்பதிற்கு பாட்டு.

தீனென்றசொல் தனக்கு தகுந்த பொருள் மூன்ருகும்
வானமைத்த வல்லோனுக்கு வழிப்படுவதும் வழக்கம்
ஈனமறவே நடந்தால் இகபரனின் கூலியுண்டாம்
ஆனபரமுகளை யன்பாகவே கேளும்
ஈமானிஸ்லாமும் இலங்குத் தௌஹீதும்
நேமமஹ்ரி பத்தும் நாலும் தீனின்பர்லாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

தீனுடைய பரலு 3 ஆகயிருக்கும்

(1) அல்லாகுத்தா ஆலாவுக்கு வழிப்படுகிறது
(2) ஆதத்தென்னும் வலக்கம
(3) ஷசாவென்னும் கூலி.

முழுக்குடைய பாட்டு.

முழுக்கின் பரழிரெண்டு முறையுடனே நிய்யத்தென்னல்
களக்கமற மெய்முழுதும் கழுகிறதும் பர்ழாகும்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

முழுக்கின் பருலு 2 இருக்கும்.

(1) நிய்யது இந்த முழுக்குடைபருலை இருக்கிறேனென்று நிய்யத்து வைக்கிறது.

(2) அந்த நிய்யத்துடன் சதுரமடங்களையும் நனைக்கிறது.

ஷறுத்துடைய பாட்டு.

மூன்று ஷறுத்துகளாம் முழுக்கில் துய்யநீர்தேடல்
பூண்ட இஸ்லாமும் புனல்விலக்கல் மேனியெல்லாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

முழுக்கின் ஷறுத்து 3 இருக்கும்.

(1) நல்ல புனல் தேடல் நல்ல தண்ணீர் தேடல்
(2) இஸ்லா மாயி இருக்கிறது.
(3) நல்ல புனல் விலக்கல் தண்ணீர் தடுக்கக்கூடிய எவ் வஸ்து இருந்தாலும் நீக்கி கொள்ளல் சுண்ணும்பு, சந்தனம், மீன் சிலாம்பு இப்பேர்ப்பட்ட வஸ்து இருந்தால் நீக்கி கொள்வது.

முழுக்குடைய சுன்னத்தின் பாட்டு.

சொல்லுமதன் ஸுன்னத்துகள் சிறந்து பிஸ்மி சொல்லல்
வெல்லுமுன் கரங்களுகி விரும்பி ஒழுச்செய்கிறதும்
அடருமலே நஜிசையகற்றி வலமுற்படுத்தல்
தொடருயு ருப்புகளைத் தேய்க்கிறது மிவ்வாறும்,

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

முழுக்கின் சுன்னத்து 6 இருக்கும்.

(1) பிஸ்மி சொல்வது
(2) முன்கை ரெண்டையும் முருக்கி கழுவுகிறது.
(3) ஒழுச்செய்தல்
(4) தொடர்ச்சியாக கழுவுகிறது.
(5) சரீரம் தேய்த்தல்
(6) வலதுபுரம் முந்திக்கழுவுகிறது.

இன்னும் அறுவறுப்பை நீக்கி பின்பு ஒழுச்செய்வதும் மடிப்புகளை ஆராய்ந்து பிறட்டி கழுவுவதும், ஒவ்வொரு உருப்பையும் மூன்று தரம் கழுவுவதும், கிபுலாவை முன்னோக்குவதும், இதுவுக்கும் ஒழுவுக்கும் இப்படியில் இரண்டாங்கலிமாவின் ஷஹாதத்தையும் இந்த துவாவையும் ஓதுகிறது சுன்னத்து அல்லாஹும்ம ஜஅன்னி மினதவ்வாபீன ஒஜஅன்னி மினல் முத்ததஹ்ஹிரீன ஒஜஅன்னி மின் இபாதி ஹஸ்ஸாலிஹீன ஸுப்ஹான ஹல்லாஹும்ம ஒபிஹம்திக்க அஷகது அல்லாயிலாக இல்லா அந்த அஸ்தகபிறுக்க ஒ அத்துபு இலேகக ஒஸல்லலாஹு அலா செய்யதினு முஹம்மதின் ஒஆலா ஆலிகி ஒஸஹுபிஹீ ஒஸல்லம்.

பின்பு இன்னு அன்ஸன்னு சூறத்து ஓதுவது.

துடக்குனுடைய பாட்டு.

துடக்காளிக் கைந்துசெயல் தொழுகை தவாபுதொடல்
படிக்கிறதும் குர்ஆனை பள்ளியிற் றரிக்கிறதும்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஆன் துடக்காளிக்கு 5 காரியம் ஹறாம்.

(1) தொழுகிறது
(2) குர்ஆனை தொடுகிறது
(3) குர்ஆனை ஓதுகிறது

(4) பள்ளியில் தரிக்கிறது
(5) மக்காவின் ஹரம்பாவை தவாவுசெய்கிறது
இவ்வைந்து காரியமாகயிருக்கும்.

ஹைழுடைய பாட்டு.

ஹைழான பெண்களுக்கு கையிணக்கம் சேர்க்கை செய்தல்
ஹைழாக முன் நோம்பும் பகர் எட்டும் செய்யஹராம்

பெண் ஹைழலானல் எட்டுக்காரியம் ஹராம் முன்சொன்ன ஐந்து காரியமும் முழந்தாழுக்கும் தொப்புழுக்கு இடையில் கையிணக்கம் செய்தலும் சேர்க்கை செய்கிறதும் நோம்பு பிடிக்கிறதும் ஆக 8 காரியம் ஹராம். இனி ஆண் பெண் இருவர்களுக்கும் ஒழுயில்லாதவர்கள் குர்ஆனை தொடுகிறதும், தொழுகிறதும், தவாபு செய்கிறதும் இம்மூன்று காரியமும் ஹராம் குர்ஆனை கண்டால் எழும்புவது சுன்னத்து.

தொழுகைக்கு முன் வேண்டிய சருத்துகளுக்குப் பாட்டு.

இஸ்லாமுடன் யுத்தியும் இடம்உடை யுடம்பு சுத்தம்
உஸ்லா முழுக்கதையும் ஒழுவையிறுக்கிறதும்
தப்லீகுடன் தனக்குத் தொழுகை விதியென றெண்ணலும்
கிபுலாவை முன்னோக்கல் குறித்த வக்தினையும்
தெரிந்து பர்ழுகளை துயர்ந்த ஸுன்னத்தை விட்டும்
அரிந்திடுவதும் ஔரத்தை அழகாய் மறைக்கிறதும்
ஓங்குந் தொழுகைக்குள்ள ஒழுங்குமுறைகளெல்லாம்
பாங்காய் அறிந்திடுதல் பத்தும ஷருத்துகளாம்
முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

தொழுகையில் தொடக்குமுன் வேண்டுமான ஷருத்து பத்தாகயிருக்கும் அப்பத்து ஷருத்தும் தொழுகை முடியும் அளவும் ஒன்றாகியே இருக்கவேண்டும்.

(1) இஸ்லாமாகி இருக்கிறது.
(2) தப்பிஜென்ற புத்தி தெரிந்துகொள்கிறேது.
(3) பெருந்துடக்கென்ற ஜனபத்து ஹைழு நிபாஸை விட்டும் சிருதுடக்கென்ற ஒழு முறிச்சலைவிட்டும் துப்பரவாயிருக்கிறதும்.

(4) உடையும் ஜடமும் இடமும் பொறுக்கப்படாத நஜிஸை விட்டும் துப்பரவாயருக்கிறது.

(5) ஏழுமான நாட்டான் மகனும் பயனும் வெள்ளாட்டியும் தொப்புழுத் தொடுத்து முழந்தாள் வரையிலுமுள்ள மேனியையும் நாட்டான் மகள் முகமும் மணிகட்டு வரையிலும் இருமண் கையுந் தவிர ரோமம் கால் நகம் உள்ளங்கால் உள்பட மேனியடங்களையும் மறைக்கிறது.

(6) பயங்கரம் அதிகமான நேரத்தில் சகல தொழுகையும் ஆயினசபரில் சுன்னத்தான தொழுகையும் தவிர மற்றும் தொழுகையடங்களையும் கிப்லாவை மூன் நோக்கிறது.

(7) தன்பேரில் தொழுகை பர்லு என்றறிகிறது

(8) ஹாலிரத்தாகிய தொழுகையின் நேரம் அறிகிறது.

(9) தொழுகையின் பாங்கு நேரத்தையறிகிறது.

(10) பர்லே சுன்னத்தை விட்டும் விபரத்தையறிகிறது

இந்த பத்து ஷருத்தில் ஒன்ருவது தப்பினல் தொழுகைகூடாது.

அது எப்படி என்ருல் தொழும்போது முருத்தத்தாய் போக்கிற நினைவை வருத்தினுலும் நினைவுமாறினுலும் நஜிஸானது உடலிலாவது உடையிலாவது தலத்திலாவது விழுந்தவுடனே அதை நீக்காவிட்டாலும் உடுமானம் அவ்றத்தைவிட்டும் உடனே அதை மறைக்காவிட்டாலும் ஒருத்துக்கு முந்திவிட்டாலும் கிப்லாவைவிட்டும் நெஞ்சு கொண்டு சருகி நின்ருலும் தொழுகை கூடாது. அறிவில்லாத புத்தியில்லாதவன் தொழுகையுடைய செயல் அடங்களையும் பர்லு என்றெண்ணினல் குற்றமில்லை பர்லே சுன்னத்தென்று அல்லது அடங்களும் சுன்னத்தென்றெண்ணினுலும் அவனுக்கு தொழுக கூடாது.

ஒழுவின் பர்லுடைய பாட்டு.

ஒதுவின் பர்லாரை உறைகுகிறேன் கேளுமுதல்
தொழுகை தனக்காக துய்தாக்கும் நிய்யததுவும்
நெற்றி முடியருகும் நாடிக்குழி வரையில்
சுற்றியிரு சோனைவரை சூல்முகங்கழுகிறதும்
கரத்திலிரு மொளியுள் கையை கழுகிடுதல்
சிரத்தில் சிலது தன்னை சீர்மஸாகு செய்கிறதும்

காலிரு கரண்டைவரை கழுகி முன்பின் இல்லாமல்
கோலமதை யொழுங்காய் கொண்டு வருவதுமாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஒழுவுடைய பர்லு 6 இருககும்

(1) நிய்யத்து அதாவது ஒழுவின் பர்லை இருக்கிறேன் என்று முகத்தை கழுவுகிறதின் துவர்க்கத்திடத்தில் நிய்யத்து செய்கிறது.

(2) அந்த நிய்யத்துடன் முகம் கழுவுகிறதும் முகத்துடைய ஹத்தாவது நீளத்தால் தலையில் முடி முளைக்கும் தலத்துக்கும் நாடி குழிக்கும் யிடையிலும் அகலத்தால் இரண்டு காதுக்கும் இடையிலுள்ள மேனி ரோமம் அடங்கலும் கழுவுகிறதும்

(3) இரண்டு கையையும் முழங்கையுள்பட கழுவுகிறது.
(4) தலையில் சிலதை மஸ்ஹு செய்கிறது.
(5) இரண்டு காலையும் பிறண்டை வரையிலும் கழுவுகிறது.
(6) முன் சொன்ன ஒழுங்கின்படியே முன் பின் ஆகாமல் கொண்டுவருகிறது.

ஒழுவின் ஷறுத்துடைய பாட்டு.

சீராயொழுவிலுள்ள ஷறுத்தாரிஸ்லாமும்
பூராயம் புத்தியுடன் பருவையறிகிறதும்
ஒழுவை பருமெனவே உவந்து கல்பிலென்னுறதும்
தெளிவாக மேனிகளில் தண்ணீர் ஒலிக்குமிடம்
பேதகங்களும் தடையும் பேனியகற்றுறதும்
துய்தாக்கும் தண்ணீரை தேடி எடுப்பதுவாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஒழுவுடைய ஷறுத்து ஆறுயிருக்கும்.

(1) இஸ்லாமும்
(2) பூருயம் புத்தியுடன்
(3) பருவையறிகிறது
(4) ஒழுவை பருமெனவே உவந்து கல் பில்என்னுகிறதும்
(5) தெளிவாக மேனிகளில் தண்ணீர் ஒலிக்குமிடம்
(6) பேதகங்களும் தடையும் பேனியகற்றுறதும்

ஒழுவின் ஸுன்னத்தின் பாட்டு.

ஒழுவில் பத்து ஸுன்னத்துகள் உவந்து பிஸ்மிசொல்லல்
கழுகிறதும் முன்கைரெண்டும் கருதி விஸ்வாக்கிடலும்
உற்றவாய் கொப்பினித்தல் ஊர் நாஷி நீர்செலுத்தல்
சுற்றமுடன் நாலிலொன்று சிரமும் செவிமஸ்கும்
பாடும் உறுப்பை முக்கால்பற்றி வலமுற்படுத்தல்
தாடியிருகால் கைவிரல் தப்பாமல் கோதுறதும்
முன்னோக்கியேகி புலாமுடிவில் துஆஓதல்
இன்னு அன்ஸல் நாவிலிறுத்தி இனிலோதலுமாம்

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஒழுவின் ஸுன்னத்து 10 இருக்கும்.

(1) பிஸ்மி சொல்லுகிறது
(2) முன்கைரெண்டையும் கழுவுகிறது
(3) வாய் கொப்பளிக்கிறது
(4) நாசுக்கு வாயுடன் தண்ணீர் செலுத்துகிறது
(5) தலையில் நாலிலொரு பங்கு மஸ்குசெய்கிறது இன்னும் தலையடங்கலும் மஸ்கு செய்கிறது. சுன்னத்தென்றும் வருகிறது இது மாலிக்குமதுகபு முந்தினது ஹனபிமது கபிலும் பருலாயிருக்கும்.
(6) இருகாதுக்கும் மஸ்கு செய்கிறது
(7) தாடியையும் கால்விரல்களையும் குடைந்து கழுவுகிறது
(8) வலதுபக்கம் முந்திக்கழுவுகிறது
(9) கிபுலாவை முன்னோக்கிறது
(10) உருப்புகளை மூன்று விடுத்தம் கழுவுகிறது.

ஆக பத்து ஸுன்னத்துகள்.

ஒழுவை முரிக்கும் பாட்டு.

முன்பின் துவாரம் விட்டும் மளியன்றி யேதும்வரல்
தன் அகங்கை யாபத்தை தொடுகிறதும் பெண்களையும்
கோதையர்க்கும் ஆடவரை கொள்ளமுறை யுண்டானல்
போதை மயக்கமதால் புத்தி தகுமாரிடினும்
சாய்ந்து உறங்கிடினும் சமைந்த இருப்பில்லாமல்
ஐந்தும் ஒழுவுதன்னை யகற்றி கெடுத்திடுமாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஒழுவை முறிக்கிறது 5 காரியமாகயிருக்கும்.

(1) முன் துவாரத்தால் பின் துவாரத்தால் பணியைத் தவிர யாதொன்றும் வெளிப்படுகிறது

(2) சமைந்த யிருப்பன்னறி உரங்குகிறது

(3) அபத்தில் அகங்கைபடல்

(4) தன்னைமறந்து போதக்கேடான தூக்கம் தூங்குகிறது

(5) தனக்குக்கொள்ளமுறையான பெண்களைத் தொடுவது

தொழுகையின் பாட்டு.

வரிசை தொழுகையினில் வழுத்தும் பர்ளுக்களும்
பிரிசமுடன் நிய்யத்தும் பெரியோன் தக்பீரும்
நேருக நிற்கிறதும் நெறியால் அல்ஹம்து ஓதுறதும்
கூருக வேறுக்ஹூகும் குனிந்து தரிக்கிறதும்
சிறப்பான இஃதிதாலும் சேர்ந்து தரிக்கிறது
பொருப்பான முன்ஸூஜூதும் பொருந்தி தரிக்கிறதும்
இடையிலிருக்கிறதும் இனங்கும் அதன் தரிப்பும்
சடையாமல் பின்ஸூஜூதும் சாற்றும் அதன் தரிப்பும்
ஆகிரிறுக்கிறதும் அத்தஹீய்யாத் தோதுறதும்
பாகிர் நபிக்கதனில் பகரும் சலவாத்தும்
ஒரு சலாம் சொல்கிறதும் ஒழுங்காகச்செய்கிறதும்
அறிவீர் பர்லெனவே அருளிய பத்தொன்பதையும்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

தொழுகையின் பர்லு 19

(1) நிய்யத்து அதாவது இந்த லுகருடைய பர்லு நால்றக்காயாத்தையும் அதாவாக கிபுலாவை முன்னோக்கினவனாக அல்லாவுக்காக தொழுகிறேன்னென்று முத்தலக்கான நாயனே முக்கையிதான அப்து வணக்கிறேனென்று நிய்யத்து வைக்கிறது.

(2) அவ்வல்: தக்பீர் அல்லாஹூ அக்பர் என்று சொல்கிறது.

(3) கிக்கபிலமுள்ளவன் பர்லான தொழுகையில் நிற்கிறதற்கு முடியாதவன் இருந்து கொள்கிறது.

(4) பாத்திஹா ஓதுகிறது

(5) ருக்குஹூச் செய்கிறது
(6) அதில் தரிக்கிறது
(7) இஃதிதால் என்ற நிலையில் நிமிர்ந்து நிற்கிறது
(8) அதில் தரிக்கிறது
(9) முந்தின ஸுஜூது செய்கிறது
(10) அதில் தரிக்கிறது
(11) இரண்டு ஸுஜூதுக்கும் இடையில் இருக்கிறது.
(12) அதில் தரிக்கிறது.
(13) இரண்டாம் ஜுஸூது செய்கிறது.
(14) அதில் தரிக்கிறது
(15) பிந்தின் அத்தஹிய்யாத் திருப்பில் இருக்கிறது.
(16) அத்தஹிய்யாதது ஓதுகிறது.
(17) நபிபேரில் ஸலவாத்து ஓதுகிறது.
(18) ஒரு சலாம் சொல்வது.
(19) இந்த ஒழுங்கின்படி தறித்திபாக கொண்டுவருகிறது.

ஆககூடிய பர்லு சுருக்கம் 19 தாயிருக்கும்.

விரிவாகிப பரலின்படி தொகை ஐந்து நேரத்தின் பரலு 17 ரக்அத்திலும் 239 தாயிருக்கும்.

லுகருக்கு நாலுரக்காயத்துக்கு பர்லு 55.
அசருக்கு நாலுரக்காயதன பரலு 55
மஹரிபுக்கு மூனுரக்காயத்துக்கு பர்லு 43
இஷாவுக்கு நாலுரக்காயத்துக்கு பர்லு 55
ஸுப்ஹூக்கு ரெண்டுரக்காயத்துக்கு பர்லு 31

யிசாவும் அஸரும் லுகரும் ஒரே மாதிரி பிரிவு

நாலுறக்ஹாயத்துக்கு விபரம்.

(1) றக்கா அத்துக்கு 14
(2) றக்காயத்துக்கு 12
(3) றக்காயத்துக்கு 12
(4) றக்கா அத்துக்கு 17

மஹரிவுக்கு மூனுறக்ஹா அத்துக்கு விபரம்.

(1) றக்கா அத்துக்கு 14
(2) றக்கா அத்துக்கு 12
(3) றக்கா அத்துக்கு 17

ஸுபுஹுக்கு பிரிவு இரண்டு றக்ஆ அத்துக்கு விபரம்
(1) றக்கா அத்துக்கு 14
(2) றக்கா அத்துக்கு 17

அப்ஆழு சுன்னத்துக்கு பாட்டு

அப்ஆழு சுன்னத்துகளிவீர்களிவ்வெட்டும்
சப்ஹிலொன்றை விட்டிடினும் சந்தேகமாகிடினும்
மறந்துறக்கா ஆத்துமுன்போ நாலென்று மனம்
இருந்தால் சலாமுக்குமுன் இருஸுஜூது செய்திடவும்
அவ்வல் தக்பிரதிலும் அரியறுக்கூத்திலும்
தவ்விறுக் கூகைவிட்டு தலை நிமிர்த்தும் வேளையிலும்
முந்தும் அத்தஹிய்யாத்து முடிந்து நிலைக்கேகயிலும்
அந்தமுடன் கையுயர்த்தல் அலங்கார ஸுன்னத்துவாம்

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.
தொழுகையில் அப்ஆழு சுன்னத்துகள் 8 இருக்கும்.

(1) நடு அத்தஹிய்யாத்து ஓதுகிறது
(2) அதற்காக இருக்கிறது
(3) அதில் நபிசல்லலாகு அலைகிவசல்லம் மீதில் சலவாத்து ஓதுகிறது.
(4) சுபிகின் பின்தினறக்கா அத்துடைய எஹுதிதாலிம் ரம்மலானில் பிந்தின 15ல் வித்திரில் பிந்தின எஹுதிதாலிலீம் குனுவத்து ஓதுகிறது.
(5) அதற்காக நிற்கிறது
(6) அதில் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் மீதில் சலவாத்து ஓதுகிறது.
(7) அவர்கள் கிளையாரையும் அந்த சலவாத்தில் சேர்கிறது
(8) பிந்தின அத்தஹிய்யாத்துடைய சலவாத்தில் கிளையாரை சேர்க்கிறது.

இந்தப்பாட்டுக்கும் மசஆலா ஆக இந்த 8ம்.

அப்ஆழு சுன்னத்தாயிருக்கும் இவைகளில் ஒன்றைவிட்டாலும் அல்லது ஒன்றில் சிலதை விட்டாலும் அல்லது சந்தேகித்தாலும் சலாம் வாங்குமுன் இரண்டு ஸுஜூதுசெய்து சலாம் வாங்குவதும் அதில் ஸுப்ஹான மல்லாயனுமூ ஒலா எஸ்ஹு

மூன்றுதரம் சொல்லுவது சுன்னத்தாகயிருக்கும். தொழுகையி லுண்டான மற்றும் பர்லு ஷறுத்து ஸுன்னத்து முறித்தல் முத லான கருமங்களை அச்சிடப்பட்டிருக்கிற பத்து ஹூல்தையான் பத்து ஹூல்மஜீது மஹானி முதலான கித்தாப்களிலும் பார்த்துக் கொள்ளவேண்டியது. உலமாக்கள் இடத்திலும் கேட்டுக்கொள்ள வேண்டியது.

தொழுகையை முறிக்கும் பாட்டு.

அளிக்கும் தொழுகையினை ஐந்துடனே பத்துச்செயல்
பழக்கமது பேசல்பர்லு ஷறுத்திழக்கல்
துடக்கு நஜிஸுண்டாகல் துடருன மூன்றுசெயல்
வெடிக்க சிறித்திடுதல் வெளிய லௌரத்து தெரிதல்
நிய்யத்துப் பேதலித்தல் நினைவு தடுமாரல்
துய்ய ஒழுமுறிதல் துலங்குங் கிபுலாமாரல்
குடிப்பூணையுள் கொள்ளுதல் குபுறை வருத்திடுதல்
எடுப்பான இச்செயலால் ஏகும் தொழுகை தன்னுல்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

தொழுகைக்குறிய விபரம் 10 ஆகயிருக்கும்.

(1) கலாம் பேச்சு பேசுகிறது அது என்ன வென்றுல்; தொழுகையில் அர்த்தம் விளங்கும்படியான ஒரு ஹர்பைக்கொண் டாவது, துடர்பிடியாய் இரண்டு ஹர்பைக்கொண்டாவது மொழிந் தால் தொழுகை முறியும். இனி தொழுகை முறியுமென்றறியாமல் பேசினுலும் பேச்சு அறியாமல் நாவில் நடத்திவிட்டாலும் தொழு கை முறியாது.

(2) மூன்று செயல் துடருகச்செய்கிறது. அதா மூன்று எட்டு வைக்கிறது மூன்று அடி அடிக்கிறது. முதலான ஒவ்வொரு உறுப்பையும் மூன்றுதரம் உஸுப்புகிறதும் மூன்றுதரம் சொரி கிறதும் கோலாயிருக்கும். இனிப்பொறுக்க முடியாத சொரிச்சலில் கையை அதிகமாய் உசுப்புகிறதைக்கொண்டு தொழுகை முறியாது

(3) நோம்பை முறிக்கும் வஸ்துவை பரிமாருகிறது. அதா வது தின்னுகிறது. குடிக்கிறதுபோல் இனி ஒரு எள்ளுபோ லொத்த வஸ்து வாயிலுண்டாயிருந்து அதை முழுங்கினுலும்

அல்லது காரலை முழுங்கினும் அல்லது வெற்றிலைபோல் கொத்தகை கொண்டு பேதகமான உமிழ்நீரை முழுங்கினும் தொழுகை முறியும் பேதகமில்லாத உமிழ்நீரை முழுங்கினல் தொழுகை முறியாது.

(4) சிறுதுடக்கு பெருந்துடக்கு உண்டாகிவிடுகிறது.

(5) தொழுகையில் நஜிஸா உண்டாகிறது. கையைக்கொண்டு அந்நஜிஸை உதறினும் தொழுகை முறியும். உலர்ந்த நஜீஸா மெனியில் விழுந்து தன்னாலே விழுந்துவிட்டாலும் மூட்டைபோல் கொத்தகை நசுக்கிவிட்டாலும் தொழுகை முறியாது.

(6) கிப்லாவை விட்டு நெஞ்சைத் திருப்புகிறது.

(7) அவ்றத்து நீங்குகிறது. இனி பிடவையை காற்றுநீக்கி உடனே அதை மறைத்துக்கொண்டாலும் பிடவை அவிந்து உடனே அதை மீழவைத்துக்கொண்டாலும தொழுகை முறியாது மீழவைப்பதில் மூன்றுசெயல் உண்டாஞய் தொழுகை முறியும்.

(8) நிய்யத்தைப் பேதகப்படுததுகிறது தொழுகையை விட்டும் வெளிப்பட்டுவிட்டேன் என்று நிய்யத்து வைத்தாலும் அல்லது தொழுகையை முறிக்கிறதை நாடினும் அல்லது தொழுகையை விட்டும் புறப்படுவோம் அல்லது தொழுவமா என்று இருமனது கொண்டாலும் தொழுகை முறியும்.

(9) றித்தத்தென்னும் குப்ரை வ்ருத்திவிக்குகிற கருமம் உண்டாகிறது. ஆதனல்லாஹா மின்ஹ.

(10) செயனலவில் சேர்ந்த பர்லை அதிகப்படுத்துகிறதும் இஹ்திலாலில் அல்லது இரண்டு ஜஸாக்கு இடையில் இருக்கிற இருப்பில் தறிப்படுகிறதுபோல் கொத்த பர்லை விடுகிறதும் தொழுகையை முறிக்கும் ஜஅலனல்லாஹா மினல் ஹாபிளீஞ அல ஸலவாத்தி.

பர்லான தொழுகையில் பர்லு 19 சர்த்துகள் 72 கூறுகிறதிற்கு பாட்டு

நிய்யத்திலே ஷறுத்து நிகழ்த்துகின்ற ஆறுகும்
தய்யோனையே நாடித் தொழுகிறேனென்றெண்ணலும்
நேரம் குறிக்கிறதும் நவிலும் ழுஹர்போலேதும்
கூறிடுவதும் பர்லை கழாவதா வென்பதையும்
சந்தேகம் நீக்கி கல்பில் சேகறித்து நிய்யத்தையும்
பிந்தாமலே அக்பர் பொருந்த முடிப்பதுவாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.
தொழுகையின் நிய்யத்தில் ஷறுத்துகள் 6 இருக்கும்.

(1) தொழுகை எனும் செயலை நாடுகிறது
(2) ஒக்தைக் குறிக்கிறது
(3) பர்லான தொழுகையை பர்லென்று குறிக்கிறது
(4) அதாவை அதாவென்னும் கலாவை ஹலாவென்றும் குறிக்கிறது.

(5) இந்த நாட்டங்களை மனதில் விபரமாய் தரிபாடாக்கிறது
(6) முந்தின தக்பீருடன் சேர்க்கிறது

அது எப்படியெனின் இந்த லொகருடைய பர்லான தொழுகையை அதாவாக அல்லாவுக்காக தொழுகிறேன் என்று சொல்லி இந்த நாட்டங்களை மனதில் விபரமாய் தரிபாடாக்கி அவ்வல் தக்பீருடன் சேர்த்து அல்லாகு அக்பர் என்று தக்பீர் கட்டுவது போல்.

பின் பாட்டு.

பத்து ஷறுத்துகளாம் பகருமுன் தக்பீரில்
சுத்தமுடன் அல்லாகு அக்பறென்று சொல்கிறதும்
ஹர்பும் தஷதீதும் ஹதுபாக ஒதாமல்
உர்பில் செவிகேள்க்க அறபாலுரைக்கிறதும்
மிக்க அலிபும் ஹேபே மிகுதமாய் நீட்டாமல்
பக்குவமாய் ரேய்க்கு சுக்ஹூன்படச் சொல்கிறது
மூன்பின் மொழியாமல் முறைதுயறு முண்டாகல்
தென்பாகவே நிலையில் தீரமுடிப்பதுமாம்
நிலையில் ஷறுத்து ஒன்று நேருக நிற்கலுமாம்
தலைபான பாத்திஹாவில் தகுந்த ஷறுத்தெட்டாகும்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

தக்பீரின் ஷறுத்து 10 அதற்கு விபரம்.

(1) அல்லாகு அக்பர் என்று சொல்கிறது

(2) அது அரபுபாஷையாகவே இருக்கிறது

(3) ஹர்புகளை பேணுகிறது

(4) ஸத்தைப் பேணுகிறது

(5) இரண்டு ஹம்ஸையும் ஹேயையும் பேயையும் நீட்டா திருக்கிறது.

(6) ரேக்கீ சுக்கூன்பட சொல்கிறது

(7) அல்லாவை முந்தியும் அக்பர் பிந்தியும் சொல்கிறது

(8) துயர்ச்சியாகச் சொல்கிறது

(9) தன் காது கேள்க்கச் சொல்கிறது

(10) நிலையில் தானே முடிக்கிறது

இதற்கு மசாலா.

ஒருவன் இமாமை றுக்ஹூஹில் இருக்கக்கண்டு தீவரமாய் தக்பீரை நிலையில் சிலதையும் குனியுதலில் சிலதையும் சொன்னால் கூடாது. நிலையில் ஷறுத்து ஒன்று அதாவது வலமிடம் சாயாமல் முன்பின் குனியாமல் நேருக நிற்கிறது.

பாத்திகாவின் பாட்டு.

வழுத்தாமல் முன்னும் பின்னும் வருசை தப்பி ஆயத்தொன்றும்
எழுத்தை விட்டிடாமல் ஷத்துஇஃறுபை பேணுறதும்
துலக்கிச் செவிகேள்க்க துயர்ந்து அறபாலும்
விலக்காமலே நிலையில் விரும்பி முடிப்பதுவாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

பாத்திகாவுக்கு ஷறுத்து 8 இருக்கும்.

(1) ஹர்புகளை பேணுகிறது. ஹர்புகள் என்றால் எழுத்துகளைப் பேணுகிறது.

(2) அதிலுள்ள தஸ்தீது 14யும் பேணுகிறது. பதினாலு ஸத்தையும் பேணுகிறது.

(3) இஹ்ராபுகளை பேணுகிறது. எஹ்ராபு என்றது சவர் சேர் பேஸை பேணுகிறது.

(4) ஆயத்துடைய ஒழுங்குப்படி ஓதுகிறது. எழு ஆயத்தையும் ஒழுங்கா ஓதுகிறது.

(5) துயர்சியா ஓதுகிறது. துயர்ச்சி என்றால் ஒழுங்கா ஓதுகிறது.

(6) அரபு பாஷையால் ஓதுகிறது.

(7) தன் காது கேள்க்க ஓதுகிறது. பிரர் காதுக்கு கேட்காமல் ஓதுகிறது.

(8) நிலையில் ஓதி முடிக்கிறது. பாத்திகாவை நிலையில் ஓதி முடிக்கிறது.

றுக்ஹூவின் பாட்டு.

இரண்டு ஷறுத்துகளாம் றுக்ஹூவிலிரு உள்ளங்கையும்
ஒண்டமுளந்தாலில் ஊனிக்குனிகிறது
நாடி றுக்கூஹூதன்னை நலமாக யேகலுமாம்
ஓடும் உறுப்பொடுங்கள் அதன் தரிப்பினில் ஷறுத்தாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

றுக்கூயில் ஷறுத்து 2க்கு விபரம்.

(1) ரெண்டு முழங்கையையும் முழந்தாளையும் தொடுமென்கிறமட்டில் குனிகிறது.

(2) வேறொரு கருமத்தை நாடிக்குனியாமல் இருக்கிறது. அதில் தரிப்பு ஷறுத்து ஒன்று.

அதாவது உறுப்புகளின் அசைவுதல் ஒடுங்கிறது. இதுபோல் மற்றும் தரிப்புகளிலும் பார்த்துக்கொள்ளவும்.

இஹூத்திதாலின் பாட்டு.

முன்றீஃதிதால் ஷறுத்து முதுகை செவ்வையாக்கிறதும்
ஊன்றி மனதிலதை உயர்ந்துநிலை சேருவதும்
நீட்டாமலே நிலையை நெறியாக நிற்கலுமாம்
தேட்டமுட னத்தறிப்பில் திரேகமொடுங்கல் ஷறுத்தாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

இஹூதிதாலின் ஷறுத்து 3 இருக்கும்.

(1) கட்டைமை நிக்கிறது

(2) இஹ்திதாலின் தன்னைநாடி நிமுறுகிறது

(3) அதின் ஸரு அக்கப்பட்டதிக்கீர்க்கு அதிகம் தாமதம் செய்யாதிருக்கிறது அதில் தரிப்பில் ஷறுத்து ஒன்று.

ஸுஜூதுடைய பாட்டு.

செய்யுமுன் ஸுஜூதிலே ஷறுத்தாறு நெற்றியையும்
கையுமுழந்தாளிரண்டு கால்விரல்களில் அகமும்
பட்டிட தரையில் தலை பிடர்கனம் பொறுக்கிறதும்
பிட்டியை யுயர்த்துறதும் பணித்துத் தலைதாழ்த்துறதும்
திரையன்றியே நெற்றியை திறந்து ஸுஜூதேகலுமாம்
முறையுடன் தன் தறிப்பில் மெய் ஒடுங்கிடல் ஷறுத்தாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஸுஜூதீல் 6 ஷறுத்துண்டு.

(1) தரையில் நெத்தியை பொருக்கவைக்கிறது

(2) இருமுழந்தாலில் சிலதையும் இரு உள்ளங்கையில் சிலதையும் இருகால் விரல்களின் உள்ளிர்ச்சிலதையும் வைக்கிறது

(3) நெத்தியை தன்னுடைய சுமக்குதலில் அகப்படாத வஸ்தின்பேரில் வைக்கிறது.

(4) தன் தலை கழுத்து இதுரெண்டுடைய கனம் தரையில் பொருக்கிறது.

(5) தலைப்பணிந்து பித்தட்டு உயர்ந்து இருக்கிறது.

(6) ஸுஜூதல்லாததை நாடாதிருக்கிறது.

இதற்கு மசலா.

ஒருவன் ஸுஜூதில் கால் விரலின் உள்ப்புறத்தை வைய்யாமல் வெளிப்புறம் அல்லது அதின் அறுகை வைய்த்தாலும் அல்லது விரல் தரையில் படாமல் உசத்திக்கொண்டாலும் ஸுஜூது கூடாது அதின் தறிப்பில் ஷறுத்து ஒன்று.

நடு இருப்புக்கு பாட்டு.

பிந்தின ஸுஜூதிலும் பேணு முன்னையைபோலாம்
இந்த ரெண்டுக்கு மிடையிருப்பில் மூன்று ஷறுத்தாம்
உருப்பும் முதுகந்தண்டும் ஒழுங்காக வைக்கிறதும்
இருப்புக் கனறி தலையை யுயர்த்தாதிருக்கிறதும்
நீளாது சந்து மட்டாயிருப்பையே நாடலுமாம்
மீளுமதன் தறிப்பில் மெய்யொடுங்குதல் ஷறுத்தாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

நடு இருப்புக்கு 3 சறுத்துகளாம்.

(1) நட்டமேயிருக்கிறது

(2) அதில் ஸராஹாக்கபட்ட திக்கீர்க்கு அதிகம் நீட்டா திருக்கிறது.

(3) ஸுஜுதால் எழும்பும்போது இருப்பல்லாததை நாடாதிருக்கிறது.

மஸாலா.

ஒருவன் ஸுஜுதில் கிடக்கும்போது நட்டுவாக்காளி போல்க் கொத்ததைக்கண்டு பதறி எழும்பினதை இருப்பாக்கிக் கொள்ள நாடினால் அதுயிருப்பாகாது மடக்கி ஸுஜுதுக்குபோய் மீழவேணும் அதின் தறிப்பில் ஷறுத்து ஒன்று.

ரெண்டாம் ஸுஜுதில் முந்தின ஸுஜுதிலுள்ள ஆறு ஷறுத்துதான் அதில் தறிப்பில் ஷறுத்து ஒன்று.

அத்தஹிய்யாத்து நடுயிருப்பின் பாட்டு.

ஈற்றி அத்தஹிய்யாத்து இருப்பில் ஷறுத்திரெண்டாம்
ஏற்ற முதுகெலும்பெல்லாம் இயல்பாக வைக்கிறதும்
வேறெதையும் நாடாமல் உயர்ந்து இருப்பதுமாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

நடு அத்தஹிய்யாத்தின் 2 ஷறுத்துகளாம்.

(1) கோணாமல் நட்டமே இருக்கிறது

(2) ஸுஜுதால் வரும்போது வேறொன்றை நாடிவரா திருக்கிறது.

பின் அத்தஹிய்யாத்தீன் பாட்டு.

கூறும் அத்தஹிய்யாதில் குறித்த ஷறுத்தேழாகும்
ஷத்தும் ஹறுபுகளும் சருகாமலோதுகிறதும்
சத்தம் செவிகேட்க சாற்றும் துடறுடனும்
பேணி இஃறுபுதன்னை பிசகாமலேலபுழும்
ஈனமுடன் முன்னும் பின்னும் இசைக்காமலோதுகிறதும்
இருப்பில் முடிக்கிறதும் இணங்கும் சலவாத்தினுக்கும்
குறிப்பாகவே இதுபோல் கூறும் ஷறுத்தேழாம்

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

அத்தஹிய்யாத்தின் 7 ஷறுத்துகளாம்.

(1) ஹறுபுகளை பேணுகிறது

(2) ஐத்துகளை பேணுகிறது

(3) இஹ்ராபுகளை பேணுகிறது

(4) ஒழுங்கா ஓதுகிறது

(5) துயர்ச்சியாக ஓதுகிறது

(6) தன் செவிகேட்க ஓதுகிறது

(7) இருப்பில் முடிக்கிறது

இதற்கு மஸாலா.

ஒருவன் அல்லாயிலாக இல்லல்லாஹுவில் நூணை லாமில் இது ஓம் செய்யாமல் வெளியாக்கி ஓதினாலும் முஹம்மதில் உண்டான மிதாவில் தன்வினை ரசூலுல்லாஹிவிலுல்ல ரேயில் இது ஓம் செய்யாமல் தன் வினை வெளியாக்கி ஓதினாலும் தஸ்தீதை பேணாமல் விட்டு ஓதினாலும் தொழுகை முறியும். (எஹினி ஓதல் கூடாது) மடக்கி ஓதவேணும். மடக்கி ஓதாவிட்டால் தொழுகை முறியும்.

அத்தஹிய்யாத்துடைய ஷறுத்து 7 போல் ஸலவாத்தில் 7 ஷறுத்துமுண்டு.

ஸலாமுடைய பாட்டு.

சொல்லுமுன் ஸலாமதிலே சூழ்ந்த ஷறுத்தைந்தாகும்
வல்லஹருபி லொன்றும் வழுகவிட்டிடாமல் ஷத்தும்
சாற்றுந்துடறுக செவிகேட்க ஓதுறதும்
மாற்றமில்லாமலதை முடிப்பதிருப்பிலும்மாம்.

முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

ஸலாமுடைய சறுத்து 5.

(1) ஹறுபுகளை பேணுகிறது

(2) ஐத்தைப்பேணுகிறது

(3) துயர்சியாக்கிறது

(4) தனக்கு செவிகேட்க ஓதுகிறது

(5) இருப்பில் முடிக்கிறது.

தறுத்தீப் பின் பாட்டு.

தறுத்தீபில் ஓர் ஷறுத்து தக்க பர்லை யெல்லாம்
திருத்தி முன்பின் இல்லாமல் உயர்த்திக்கொண்டுவாரதுவாம்
முன்சொன்ன பாட்டுக்கு பின் சொல்வது அர்த்தம்.

தறுத்தீபில் சறுத்து 1 இருக்கும்.

அதாவது முன் சொல்லப்பட்ட பர்லுகள் யாவையும் முன்பின் ஆகாமல் அதஅதின் முறைப்படி கொண்டு வருகிறதை தன்பேரில் பர்லென்று அறிகிறது.

அதற்கு மஸாலா.

இந்த பர்லுகளின் செயலாலுள்ள பர்லை அதின் தலம்மல்லாதத்தில் செய்தாலும் சொல்லினாலுள்ள பர்லில் சலாமையும் தொழுகையை தொடுக்கிற நிய்யத்தைக் கொண்டுள்ள தக்பீரையும் முரண்டாக வருத்தினாலும் தொழுகை முறியும்.

இதற்கு மஸலா.

இமாமானவன் அல்லது தனியே தொழுகிறவன் குறிப்பான ஒரு பர்லை விட்டதை மறந்து அல்லது சக்குவைத்து அது போல்க்கொத்ததை அடுத்து ரக்ஹாயத்தில் எத்தமுதல் நினைவு வந்தவுடன் தீபரமாக விட்டதைக்கொண்டுவரவேணும். இல்லாதிடில் தொழுகை முறியும். அதை எத்திய பின் நினைவு வந்தால் அதைத்தானே கணக்கேத்திக்கொள்ளவும் அதுரெண்டுக்கும் இடையிலுள்ளது வீணாச்சுது. ஆனால் விட்ட பர்லு குறிப்பு இல்லாதபோது விட்டது நிய்யத்து அல்லது முந்தின தக்பீர் ரெண்டு உத்தேசித்துக்கொண்டால் தொழுகை முறியும்.

முற்றிற்று.

விநாயகன் பிரஸ், பரமக்குடி—34